**PBA**
Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

13.5.2023

**ஊடக வெளியீடு**
Ir. பத்மநாதன்
தலைமை நிர்வாக அதிகாரி,
PBA ஹொல்டிங் பெர்ஹாட் மற்றும் PBAPP.

# சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலை: புதிய ரிம31 மில்லியன் தொகுப்புத் திட்டம் 2024, ஜனவரியில் செயல்படுத்தப்படும்

**• தொகுப்பு 12A கீழ் சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலையின் (WTP) அதிகபட்ச நீர் சுத்திகரிப்பு வடிவமைப்புக் கொள்ளளவு 2024ஆம் ஆண்டளவில் ஒரு நாளைக்கு 114 மில்லியன் லிட்டர் (MLD) அதிகரிக்கும்.**

பினாங்கு, சனி, 13.5.2023: WTP இன் அதிகபட்ச நீர் சுத்திகரிப்பு கொள்ளளவை விரைவில் அதிகரிக்க சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலையில் (WTP) புதிய நீர் சுத்திகரிப்புத் தொகுதியை உருவாக்குவதற்கானப் பணிகள் துரிதப்படுத்தப்படுகின்றன.

"தொகுதி 12A" என்று பெயரிடப்பட்ட புதிய திட்டமானது 2023, டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு, ஜனவரி 2024க்குள் செயல்பாடுக் காணும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொகுப்பு 12A பற்றிய முக்கிய விவரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | மேம்பாட்டு செலவு (PBAPP மூலம் முதலீடு) | ரிம31 மில்லியன் |
| 2 | அதிகபட்ச நீர் சுத்திகரிப்பு கொள்ளளவு | ஒரு நாளைக்கு 114 மில்லியன் லிட்டர் (MLD) |
| 3 | நீர் சுத்திகரிப்பு தொழில்நுட்பம் | 'Conventional' நீர் சுத்திகரிப்பு |
| 4 | மூல நீர் ஆதாரங்கள் | • சுங்கை மூடா |

PBA
Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

| | | |
|---|---|---|
| | | • விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணை(EMD) |
| 5 | வேலை தொடக்கம் | 2022, மார்ச் |
| 6 | திட்டமிடப்பட்ட நிறைவு நாள் | 2023 டிசம்பர் / 2024, ஜனவரி |
| 7 | முக்கிய நன்மைகள் | • 2030 ஆம் ஆண்டிற்கான அதிக நீர் தேவையை பூர்த்திச் செய்ய அதிகமாக சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி.<br>• சுங்கை டுவா WTP ஆலை பராமரிப்பு அட்டவணைகளைக் குறைந்த நீர் தடையுடன் செயல்படுத்துதல் |
| 8 | முக்கிய பயனாளிகள் | செபராங் பிறை மற்றும் பினாங்கு தீவில் சுமார் 676,857* உள்நாட்டு மற்றும் வணிக நீர் பயனீட்டாளர்கள் உள்ளனர். |

*Domestic and Non-Domestic Consumer for the year 2022

தொகுப்பு 12A இன் மேம்பாட்டுத் திட்டம், பினாங்கின் மிகப்பெரிய மற்றும் மிக முக்கியமான சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலையின்(WTP) வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிக்கிறது.

<u>சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலையின் அதிகபட்ச சுத்திகரிப்பு கொள்ளளவை 1,342 MLD ஆக உயர்த்துதல்</u>

சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலை(WTP) பினாங்கின் மிக முக்கியமான நீர் விநியோக சொத்து, ஏனெனில் இது 2022 இல் PBAPP வழங்கிய சுத்திகரிக்கப்பட்ட நீரில் 83.51% உற்பத்தி செய்துள்ளது.

இந்த ஆலையில் இருந்து சுமார் 64.57% சுத்திகரிக்கப்பட்ட நீர் செபராங் பிறை, அனைத்து பகுதிகளிலும் உள்ள பயனீட்டாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 35.43% பினாங்கு தீவில் உள்ள

Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

பயனீட்டாளருக்கு வழங்கப்படுகிறது. (ஆலையிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீர் பெருநிலத்திலிருந்து தீவுக்கு 3 ஜோடி இரட்டை நீர்மூழ்கிக் கப்பல் குழாய்கள் வழியாக செலுத்தப்படுகிறது). (3 sets of twin submarine pipelines).

சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலையின் அதிகபட்ச வடிவமைப்பு சுத்திகரிப்பு கொள்ளளவு 1973-இல் 143 MLD இலிருந்து 2023-இல் 1,228 MLD ஆக மேம்படுத்தப்பட்டுள்ளது. 2024,ஜனவரி முதல் தொகுப்பு 12A கீழ் செயல்படுத்தப்படுவதன் மூலம், இந்த நீர் சுத்திகரிப்பு ஆலையின் அதிகபட்ச வடிவமைப்பு கொள்ளளவு 1,342 MLD ஆக அதிகரிக்கக்கூடும்.

சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலையின் முதன்மை மூல நீர் ஆதாரம் சுங்கை மூடா ஆகும். சுங்கை மூடாவில் இருந்து PBAPP எடுக்கக்கூடிய மூல நீரின் அளவுக்கு வரம்பு உள்ளது. அங்கிருந்து 14 கெடா நீர் சுத்திகரிப்பு ஆலைகள் மற்றும் 4 விவசாய நீர்ப்பாசனங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. எனவே, சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலைக்கான கடைசி விரிவாக்கத் திட்டம் தொகுப்பு 12A இருக்கலாம்.

சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலையின் இரண்டாம் நிலை அல்லது மாற்று மூல நீர் ஆதாரம் விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணை (EMD) மூலம் பெறுகிறது. தற்போது, இந்த விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணையின் மூல நீர் இருப்புக்கள் வறண்ட காலங்கள் அல்லது அவசரகால சூழ்நிலைகளில் மட்டுமே சுங்கை டுவாவில் பயன்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தியை மையப்படுத்துதல்

PBAPP அதன் நீர் செயல்திட்டத்தின் 2030 (WCP 2030) கீழ் விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணை, சுங்கை கெரியன், சுங்கை மூடா மற்றும் சுங்கை பிறை போன்ற பிற மூல நீர் ஆதாரங்களைக் கொண்டு புதிய நீர் சுத்திகரிப்பு ஆலைகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

PBAPP, செபராங் பிறையில் சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தியை மையப்படுத்தும் நடவடிக்கை அதன் வாரியத்தின் செலவுகளைக் குறைக்கவும் மற்றும் குறிப்பிட்ட மாவட்டங்களின் தேவைகளை நேரடியாக நிவர்த்திச் செய்யவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக, PBAPP சுங்கை கிரியான் நீர் சுத்திகரிப்பு ஆலையின், முதல் பிரிவை விரைவுப்படுத்தத் திட்டமிடுகிறது. இதன் மூலம், அதிகமான சுத்திகரிக்கப்பட்ட நீரை உற்பத்தி செய்யவும் மற்றும் தென் செபராங் பிறை (SPS) நீர் விநியோகத் தேவைகளைப் பூர்த்திச் செய்யவும் திட்டமிட்டுள்ளது. இருப்பினும், மேம்பாட்டுப் பணிகளுக்கான ஒப்பந்தங்களை வழங்குவதற்கு முன்னர், தென் செபராங் பிறையில் முன்மொழியப்பட்ட மேம்பாட்டுத் தலத்தில் நிலம் கையகப்படுத்தும் சிக்கல்களை விரைவாகத் தீர்க்க, மாநில நிலம் மற்றும் சுரங்க அலுவலகத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டும்.

இதற்கிடையில், PBAPP அதன் “Seberang Perai Selatan 2023 Response Plan” (SPS 2023RP) கீழ் இடைக்கால திட்டங்களைச் செயல்படுத்தும்.

SPS 2023RP திட்டத்தின் முழு தொழில்நுட்ப விவரங்களையும் PBAPP அடுத்த வாரம் வெளியீடும்.

நன்றி.

---


எழுத்தாக்கம் :Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
கார்ப்பரேட் தகவல் பிரிவு

மின்னஞ்சல் :syarifah@pba.com.my